உ

சிவமயம்



தெல்லிப்பழை, மாதனையைப்

பிறப்பிடமாகவும்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை

வதிவிடமாகவும் வரித்துக்கொண்ட

சைவசித்தாந்த பண்டிதர்

வைத்தியகலாநிதி

# நாகலிங்கம் கனகரத்தினம்

அவர்களின்

அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

1999-03-08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

தெல்லிப்பழை, மாத்தனையைப்
பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை
வதிவிடமாகவும் வரித்துக் கொண்ட

சைவசித்தாந்த பண்டிதர்
வைத்தியகலாநிதி

# நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள்


அமரத்துவம்
குறித்த

# நினைவு மலர்

20, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.
வெகுதானிய வருடம், மாசித்திங்கள் 24ஆம் நாள்
08.03.1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவசித்தாந்த பண்டிதர்

## வைத்தியகலாநிதி நாகலிங்கம் கனகரத்தினம்

தோற்றம்
30.10.1912

மறைவு
06.02.1999

## திதி நிர்ணயம்

வெகுதானியவருட தைத்திங்கள் இருபத்திமூன்றாம் நாள்
அபரபக்க ஷஷ்டியில் வாரிவழங்கி
சைவத்தொண்டு புரிந்த - கனகரத்தினம் மலர்ந்தமுகத்தோடு
பார்பதி பரமேசுவரன் அடி சென்றடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்
## ஸ்ரீகணபதி துணை

ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல்நிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கையலார்புனல் செல்வமல்கும் சீர்கொள்செங்காட்டம் பிடியதனில்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே.

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீ புரிநல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமேயா ளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகியுள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தாண்டகம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்ற வரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட்
செய்ம்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

## திருப்புகழ்

அகரமு மாகி யதிபனுமாகி
யதிகமுமாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனெனவாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே
இரு நில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வன முறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்டவந்தெய்தி
எண்ணுதற்- கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள்தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திடமூடிய மாயவிருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற்சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்

[குளிர்ச்சியும் நறுமணமும் பொருந்திய செந்தாமரை மலர்போன்ற பாதத்தில் அணிந்துள்ள சிலம்பு பலவிதமாக இசைக்க,]

பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்

[பொன் அரைஞாணும் வெண்பட்டு ஆடையும் அழகிய இடையில் நன்கு பொருந்திய அழகை வீசிக்கொண்டிருக்க,]

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்

[பெரிய வயிறும் பெரிய உறுதியான தந்தமும் யானைமுகமும் நெற்றியில் விளங்கும் குங்குமமும்]

அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்

[ஐந்து கரங்களும் அவற்றுள் இரண்டில் தரித்த அங்குசம், பாசம் என்ற ஆயுதங்களும் இதயத்தில் நிலைத்திருக்கின்ற நீல வடிவழகும்]

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

[தொங்கிய துதிக்கையும் நான்கு பெரிய தோள்களும், மூன்று கண்களும், மும்மதங்கள் கசிந்ததால் ஏற்பட்ட சுவடும்]

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இரண்டு செவிகளும், ஒளிர்கின்ற பொற்கீரிடமும், மூன்று நூல்கள் சேர்ந்த பூணூலும் ஒளிவீசும் மார்பும். (உடைய)]

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!

[சொற்களால் விளக்க முடியாத துரிய மெய்ஞானமாகிய அற்புத நிலையில் நிலைத்து நிற்கின்ற கற்பக மரத்தைப்போல விரும்பியதைக் கொடுக்கின்ற யானை முகத்தோனே,]

முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

[(மா, பலா, வாழை என்னும்) முக்கனிகளை உண்பவனே! பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவனே! இந்தப் பிறவியிலேயே என்னை ஆட்கொள்வதற்காக]

தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்

[தாயைப் போல் என்முன் தோன்றி, தொடர்ந்து வரும் பிறவிகளுக்குக் காரணமான அறியாமையை நீக்கி,]

திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

[திருத்தமானதும் முதன்மையானதும் ஐந்து ஒலிகளின் சேர்க்கையுமான பிரணவத்தின் பொருள் எனக்குத் தெளிவாக விளங்கும்படி என் உள்ளத்தில் புகுந்து,]

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென

[குருவின் உருவில் பூமியில் தோன்றி நிலையான பொருள் எது என்பதை உணர்த்தி,]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே

[கவலையின்றி ஆனந்தத்துடன் இருக்கும் வழியை எனக்கு அருளி, உனது கடைக்கண் பார்வையால் கொடிய வினைகளையும் அகற்றி,]

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி

[உவட்டாத உபதேசத்தை என் செவியில் அருளி, தெவிட்டாத தெளிவான ஞான இன்பத்தை அளித்து,]

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்

[ஐம்புலன்களையும் அடக்கும் வழியைக் கருணையுடன் இனிமையாக எனக்கு அருளி,]

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து

[புலன்களைக் கடந்த உண்மையை எனக்கு அறிவித்து, இருவினைகளையும் அறுத்து, அறியாமை இருளை விலக்கி,]

தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே

[(ஸாலோகம், ஸாமீபம், ஸாரூபம், ஸாயுஜ்யம் என்ற) நான்கு உயர்ந்த முக்தி நிலைகளை எனக்கு அருளி, (ஆணவம், கர்மம், மாயை எனும்) மூன்று மலங்களால் ஏற்படும் மயக்கத்தை போக்கி,]

ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி

[பிரணவ மந்திரத்தின் துணையால் இவ்வுடலின் ஒன்பது வாசல்களையும் ஐம்புலன்களாகிய கதவுகளையும் அடைக்கும் வழியைக் காட்டி,]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

[(மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை என்னும்) ஆறு ஆதாரங்களையும் கடந்த நிலையைப் பெறுதற்கரிய பேறாக எனக்கு அருளி, மௌன நிலையை அளித்து,]

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி

[இடை, பிங்கலை என்னும் நாடிகள் மூலம் உட்கொள்ளப்படும் பிராணவாயுவின் துணைகொண்டு குண்டலினியைச் சுழுமுனை வழியே கபால வாயில் வரை செலுத்தும் விதத்தை எனக்கு அறிவித்து,]

மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்

[(அக்கினி, சூரியன், சந்திரன் என்னும்) மூன்று மண்டலங்களையும் ஊடுருவி நிற்கும் தூணாகிய சுழுமுனையின் அடியில் தொங்கிக்கொண்டிருக்கும் பாம்பாகிய குண்டலினியை எழுப்பி,]

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

[அக்குண்டலினியிலிருந்து மௌனமாக ஒலிக்கும் அசபை என்னும் ஹம்ஸ மந்திரம் தெளிவாக ஒலிக்கும்படி செய்து,]

மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே

[மூலாதாரமாகிய அக்கினி மண்டலத்திலுள்ள கொழுந்து விட்டெரியும் குண்டலினியை மூச்சுக்காற்றினால் ஏற்படும் பிராண சக்தியின் துணைகொண்டு எழுப்பும் வழியை எனக்கு அறிவித்து,]

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[குண்டலினி ஸஹஸ்ராரத்தை அடையும் பொழுது ஏற்படும் அமுத நிலையையும், சூரிய நாடியாகிய பிங்கலையின் இயக்கத்தையும், சந்திர நாடியாகிய இடையின் இயக்கத்தையும் எனக்கு விளக்கி,]

இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்

[இடைச்சக்கரமாகிய விசுத்தி சக்கரத்தின் பதினாறு நிலைகளும் உடலாகிய சக்கரத்தின் பல்வேறு உறுப்புக்களின் தன்மையும் எனக்கு விளங்கும்படி செய்து,]

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்

["நம" என்று தூலமாக உச்சரிக்கப்படும் 'ஓம் நமசிவாய' என்ற ஆறெழுத்து மந்திரமும் சூட்சுமமாக உணரப்படும் 'ஓம் சிவாய' என்ற நாலெழுத்து மந்திரமும் எனக்கு எளிதில் சித்திக்கும்படி செய்து,]

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

[சுவை, ஒளி முதலிய பஞ்சதன்மாத்திரைகள், மனம், புத்தி, அகங்காரம் என்ற எட்டையும் கொண்ட புரியட்டகத்தின் தன்மை எனக்கு விளங்கும்படிச் செய்து மூலாதாரத்திலிருந்து ஸஹஸ்ராரம் வரை எட்டு நிலைகளும் அனுபவமாகும்படிச் செய்து,]

கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி

[கபால வாயிலில் உள்ள ஸஹஸ்ராரம் என்னும் சக்கரத்தைக் காட்டி சித்திகளும், முக்தியும் எனக்கு அருளி,]

என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[என்னை நான் உணரும்படி எனக்கு அருள்செய்து, முன்செய்த வினைக்குக் காரணமாகிய ஆணவ மலத்தை நீக்கி,]

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)

[சொல்லும் எண்ணமும் கடந்த 'மனோலயம்' என்னும் நிலையை எனக்கு அருளி, என் உள்ளம் தெளிவாக இருக்கும்படிச் செய்து,]

இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

[இருளும் ஒளியும் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டவை என்ற உண்மையை எனக்கு உணர்த்தி, எனக்கு ஆனந்தத்தை அருளி,]

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்

[எல்லையில்லா ஆனந்தத்தை அளித்து, துன்பங்கள் தவிர்த்து அருள் வழியைக் காட்டி,]

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி

[நாதமாகிய புற உலகிலும் சித்தமாகிய அகவுலகிலும் சிவனைக் காணும்படி செய்து,]

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

[சிறியவற்றிற்குச் சிறியதாகவும் பெரியவற்றிற்குப் பெரியதாகவும் உள்ள பொருள் என்னுள்ளேயே கணுமுற்றி நின்ற கரும்பாக, நேரில் அனுபவித்து உணரக்கூடிய ரசமாக, இருப்பதைக் காட்டி,]

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[சிவவேடமும் திருநீறும் விளங்கும் ஸாரூப்ய நிலையை எனக்கு நிலையாக அளித்து, மெய்த்தொண்டர் குழாம் என்ற ஸாலோகத்தையும் அளித்து,]

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

[ஐந்தெழுத்தின் மேலான பொருள் நெஞ்சில் நிலையாக இருக்கும்படி அறிவித்து,]

தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

[உண்மை நிலையை எனக்கு அருளி, என்னை ஆட்கொண்ட ஞானவடிவாகிய விநாயகப் பெருமானே! நறுமணம் கமழும் உன் பாதங்களே சரணம்!]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுதான் வாழ்க்கை:-

மாத்தா னவத்தையும் மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டை யுண்டோ நித்தனன்பு கொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர் போ லிருப்பர் பற்றற்றவரே.

- பட்டினத்தார் பாடல்

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதென்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவும் கற்பியுமே.

எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ வறிகிலேன்
கண்ணக னிலத்துனுள்ளே பொழுதேயருட்
ககன வட்டத்தினின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலோடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மை, இந்நிலை பதியுமட்டுமே
பதியா யிருந்த தேகப்
பரிவுகுலையாமலே கௌரி குண்டலியாயி
பண்ணவித னருளினாலே
விண்ணிலவு மதியமுத மொழி யாது பொழியவே
வேண்டுவே னுமதடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

- தாயுமானவர் பாடல்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Flashes from*

# SRI SARADA DEVI

It is essentil to perform spiritual practices in a secluded place. When the plant is young, fencing is necessary, but when it grows big, the cattle cannot do any harm; so after some years of meditation when the mind is formed, you can remain anywhere and can mix with any person and the mind will not be affected.

When the desire arises in the mind to know anything, then pray to Him alone in a lonely place with tears in your eyes. He will remove all dirt and sorrow from your mind and will make you understand everything.

Always discriminate. Try to realize that the outside object which is attracting your mind is impermanent, and turn your attention to God.

Always try to do the Lord's work and at the same time try to practise Japa and meditation. If you do such work, your mind will not be obsessed with evil thoughts. If you sit alone idly, al sorts of thoughts may come and disturb your mind.

You are fortunate, as you have got this human body. Pray to the Lord as much as you can. You must labour hard. It is difficult to attain anything without labour. Some time must be daily set apart for prayer and spiritual practices, even though one is in the midst of worldly activities.

While performing Japa, take the name of God with the utmost love, sincerity and self-surrender. Before commencing your meditation daily, first think of your utter helplessness in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

this world and then slowly begin practice of Sadhana as directed by your Guru.

My child, austerities of worship, practise all these things right now. Will these things be possible later on? Whatever you want to achieve, achieve it now, this is the right time.

Don't relax practice, simply because you do not get His vision. Does an angler catch a big carp every day, the moment he sits with the rod? He has to wait and wait, and many a time he is disappointed.

The conjunction of the day and the night is the most auspicious time for calling on God. The mind remains pure at this time.

The Mantra purifies the body. Man becomes pure by repeating the name of God. So repeat His name always.

If you do good action, that will counteract your past evil actions. Past sins can be counteracted by meditation, Japa and spiritual thought.

One must have reverence for the Guru. Whatever he might be, one's chance of salvation lies in one's reverence for him. Observe how the disciples of the Master revere him! Out of reverence for him they revere not only all the members of his family, but even the cats from his home district.

Initiation (by a Guru) is necessary. It purifies the body. By repeating the mystic syllable of the Lord, man becomes purified. There is a Puranic story about this. Narada had been to Vaikuntha, the heaven where the Lord the resides. At that time Narada was not initiated. Narada departed after a short



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

talk with the Lord. When he left the place the Lord asked Lakshmi (the divine consort) to sprinkle Ganga water to purify the place where Narada had been sitting. Lakshmi said to her Lord, "Why do you ask me to do this? Narada is a great devotee." The Lord replied, "He may be a great devotee, but he is not yet initiated" unless one is initiated his body is not purified. For the purification of the mind and the body initiation by a Guru is necessary.

Man becomes purified by repeating a Mantra.

The Lord has given the fingers, make the best use of them by counting His Mantra.

Do you know the significance of Japa and other spiritual practices? By these the power of the sense-organs is subdued.

Past sins are counteracted by meditation, Japa and spiritual thought.

Pray to God with all your might. One has to work. Can anything be achieved without work? Even in the midst of household duties one must make time for prayer.

The mind is like a mad elephant. It rushes with the wind. That is why one must distinguish between good and evil and work hard for the sake of God.

Never fear, He is ever looking after you. Do His work and practise Sadhana. A little work daily drives away idle thoughts from the mind. A Solitary and inactive life is liable to be troubled with idle thinking.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Do not give up Japa even if the mind is unwilling and unsteady. You must go on with the repetition. And you will find that the mind is getting gradually steadier—like a flame in a windless corner. Any movement in the air disturbs the steady burning of the flame; even so the presence of any thought or desire makes the mind unsteady. The Mantra must be correct utterance delays progress.

A Single utterance of the Lord's name is as effective as a million repetitions of it, if only you do it with a steady, concentrated mind. What is the use of repeating a million times with an absent mind? You must do this whole-heartedly. Then only can you deserve His grace.

One must repeat the Mantra at least fifteen to twenty thousand times a day, then only one will get some results. One is sure to get it. One must practise first before one complains that one is not progressing. But then one must practise Japa with a little attention. People don't practice and simply say, "Why an I not progressing spiritually?"

Early morning and evening, that is when night passes into day and day into night—these are the best hours for meditation. One should Meditate regularly at fixed hours; for who knows when the auspicious moment will come, when one will have a vision of the Divine? Such a moment comes Suddenly without any premonition. So one should keep to the routine, however much one's mind might be disturbed.

Such is life, here today, gone tomorrow! Nothing goes with one, except one's merit and demerit; good and evil deeds follow one even after death!

There is no happiness while living in this body. The world is full of sorrow. Happiness is only an empty word. Only



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

those who have received the grace of the Master (Shri Ramakrishna) have been able to recognise him as God. and that is their only joy.

Man finds fault in others after bringing down his own mind to that level. Does anyone really lose anything by others' criticism? the critic himself suffers. I have been like this from my child-hood; I am never critical about other people's faults. I try to remember people for the least service they have done for me. To think that one should look for people's faults! No one should look for faults. I never learnt that. To forgive is divine.

Remember one thing. If you want peace of mind then give up faultfinding. If you would search for fault at all find out your own faults and shortcomings. Learn to accept everyone as your own. No one is alien to you, the whole world is yours.

Whoever has called upon the Master once has nothing more to fear. If one calls upon him repeatedly, he becomes compassionate; and so a devoted attachment comes into being. This love for love's sake should be hidden from all eyes. The Gopis of Vrindaban experienced it, they knew nothing but Krishna.

All that matters is to have the mind fixed on the Lord. The Master came this time to save all—rich or poor, educated or uneducated. The (southern) Malaya breeze (i.e. divine grace) is blowing strong enough; anyone who will hoist his sail a little, who will seek refuge in him—will be fully satisfied. All trees will be turned into sandalwood (by this breeze)—all



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

trees and plants that have a little hardwood except grass and bamboo.✡

When a pure mind performs Japa, he feels as if the holy name bubbles up spontaneously from within himself. He does not make an effort to repeat the name. One should practise Japa and meditation at regular times giving up idleness.

The mind is everything. If is in the mind alone that one feels pure and impure. A man, first of all, makes his own mind guilty and then alone he sees another man's guilt.

The mind is by nature restless. Therefore at the outset, to make the mind steady, one may practise meditation by regulating the breathing a little. That helps to steady the mind. But one must not overdo it. That heats the brain. You may talk of the vision of God or of meditation, but remember, mind is everything. One gets everything when the mind becomes steady.

Even if the mind be not concentrated, do not give up the repetition of the holy word. Do your duty. While repeating the name the mind will be steady like a candle flame in a place protected from the wind. It is the wind alone that makes the flame flicker. In the same way, our fancies and desires make our mind restless.

Do the Master's work and along with that practise spiritual discipline. Some amount of work keeps the mind free from idle thoughts. If one sits alone without any work, various thoughts may come into the mind.

---

✡ Alluding to the popular belief that the Malaya breeze has the power.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Even if you feel no attraction for the Lord, you will succeed by only repeating His name. Whether you jump into water or are pushed into it, your cloth will get drenched. Will it not? Meditate every day, since your mind is yet immature. The practice of meditation will make the mind one pointed. Discriminate always between the real and the unreal and try to fix the mind on God.

•

One should not hurt others even by words. One must not speak even an unpleasant truth unnecessarily. By indulging in rude words, one's nature becomes coarse. One's sensibility is lost if one has not control over one's speech. Sri Ramakrishna used to say, "One should not ask a lame person how he went lame."

What little intelligence man possesses! He may require one thing but he asks for another. He starts to mould an image of Siva and often ends by making that of a monkey. It is best therefore to surrender all desires at the feet of the Lord. He will do whatever is good for us. But one may pray for devotion and may detachment. These cannot be classed as desires.

Money always taints the mind. You may think that you are above money and that you will never feel any attraction for it. You may further think that you may leave it behind at any moment. No, my child, never harbour this thought in your mind. Though a tiny little loophole it will enter into your mind and then strangle you gradually quite undetected.

Don't be afraid. Human birth is full of suffering and one has to endure everything patiently, taking the name of God. None, not even God in human form, can escape the sufferings of the body and mind. Even Avataras, saints and sages have to undergo the ordeal of suffering, for they take upon themselves the burden of the sins of omission and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

commission of ordinary human beings and thereby sacrifice themselves for the good of humanity.

But child, don't be worried. These earthly ties are transitory. Today they seem to be the be-all and end-all of life and to-morrow they vanish. Your real tie is with God.

Pray to the Lord to make your heart as pure as the star. As a result of sincere and regular Japa and meditation you will find that the Lord will speak to you. All your desires will be fulfilled and you will experience pure bliss.

Even the injunctions of destiny are cancelled if one takes refuge in God. Destiny Strikes off with her own hands what she had written about such a person.

Difficulties come, but they do not last for ever. You will see that they pass away like water under a bridge.

The Master used to say, "At the time of death I shall have to stand by those who pray to me." These are the words from his own lips.

Lay the burden of your mind before Sri Ramakrishna. Tell him your sorrows with your tears. You will find that he will fill your arms with the desired object.

Never fear. He is ever looking after you. Do His work and practise Sadhana. A little work daily drives away idle thoughts from the mind.

Call on the Lord who pervades the entire universe. He will shower His blessings upon you.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The mind is restless; so in the beginning, one should hold one's breath for short periods and try to meditate. It helps to calm the mind. But one must not overdo this; it heats the head. Realisation of God or meditation, all these depend upon the mind. Concentrate, and everything will come to pass. Men are always forgetful of God. That is why whenever there is a need, God comes in human form and shows the way to piety.

The power of the Guru is transmitted through the Mantra to the disciple. That is why the Guru at the time of initiation takes on himself the sins of the disciple and suffers so much from physical maladies. It is extremely difficult to be a Guru for he has to take the responsibility of the disciple's sins.

Many people seek God only after disappointment in other spheres. But one who from childhood can place one's heart at the Master's feet like a fresh flower is blessed indeed.

Open your grief-stricken heart to the Lord. Weep and sincerely pray, "O Lord. draw me towards You, give me peace of mind," By doing so constantly you will gradually attain peace of mind.

God is one's very "own". It is the eternal relationship. One realizes Him in proportion to the intensity of one's feeling for Him. Don't be afraid. Always remember that somebody is protecting you.

The rich should serve God and His devotees with money, and the poor should worship God by repeating His name.

It is true that He is doing everything, but very few feel like that. Being maddened with pride, people think that they



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

are doing everything and do not depend upon Him. God protects him from all dangers who depends upon Him.

Dreams regarding the Master are real, but he forbade his disciples to narrate, even to him, dreams regarding himself.

Repeating the name of God a number of times, telling the rosary or counting on fingers is calculated only to direct the mind to God. The natural tendency of the mind is to run this way and that. Through the above means, it is attracted to God.

Is not a photograph His shadow? As you go on praying to Him, He manifests Himself through that picture.

The difference between a great soul and an ordinary man is this: The latter weeps while leaving this body, whereas the former laughs. Death is a mere play to him.

First offer to God whatever you eat. One must not eat unoffered food. As your food is, so will be your blood. From pure food, you get pure blood, pure mind and strength. Pure mind begets Prema-Bhakti (ecstatic love).

God alone is true. Everything else is false.

The goal of life is to realize God and to be always immersed in His thought.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடு

பெயர் :- டாக்டர் நாகலிங்கம் கனகரத்தினம்

பிறந்த இடம் :- மாத்தனை, தெல்லிப்பழை

பெற்றோர் :- இளையதம்பி நாகலிங்கம்
செல்லம்மா

உயர்கல்வி :- கொழும்பு மருத்துவக் கல்லூரி
உதவி வைத்திய அதிகாரி (R.M.P)

திருமணம் :- மானிப்பாய் நாகலிங்கம், கண்மணி
தம்பதியினரின் மூத்த மகள்
இராஜாம்பிகை

பிள்ளைகள் :- இராஜேஸ்வரி, விக்னேஸ்வரன்,
நரேந்திரன், கனகேஸ்வரி, சுரேந்திரன்,
இரவீந்திரன், யோகேந்திரன்,
கனகவரதன்.

## பிள்ளைகளின் திருமண வாழ்க்கை:-

1. இராஜேஸ்வரி + வைத்தியகலாநிதி சபாலிங்கம்
ஜோதிலிங்கம் (இங்கிலாந்து)
(பிள்ளைகள் - பிரதீபன், சிவாஞ்சினி)

2. விக்னேஸ்வரன் + இரதிலஷ்மி (கனடா)
(பிள்ளைகள் - ஷயந்தன், சிவானி)

3. நரேந்திரன் + நாகேஸ்வரி (இங்கிலாந்து)
(பிள்ளை - ஹரீஷன்)

4. கனகேஸ்வரி + கலாநிதி. சிதம்பரப்பிள்ளை ஞானச்சந்திரன்
(விவசாயத்திணைக்களம், வட - கிழக்கு மாகாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிள்ளை. – கஜானி)

5. சுரேந்திரன் + சத்தியரூபி
(பிள்ளைகள் - டிலானி, மகிழினி)

6. இரவீந்திரன் + செல்வறஞ்சினி
(பிள்ளைகள் - இராஜீவ், றெபேக்கா)

7. யோகேந்திரன்

8. கனகவரதன் + சுகந்தமலர் (கனடா)
(பிள்ளைகள் - டனீற்றா, அனீற்றா)

வைத்திய சேவை விபரம் :-

களுத்துறை, கெக்கிராவை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் வைத்தியசாலை (ஓய்வு)

விளையாட்டுத்துறை:-

யுனைட்டெட் கிளப் (United Club) – ரென்னிஸ் அங்கத்தவர்

ஆன்மீகப்பணி :- புராணபடனம், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியமை, சமய நூல்கள் வெளியிட்டமை.
தகைமை: சைவ சித்தாந்தப் பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம் துணை

# வாழ்த்துக்களும் ஆசியுரையும்
# நல்லை திருஞானசம்பந்த ஆதின இரண்டாம் குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப்பரமாசாரிய சுவாமிகள்.

எமது ஆதினத்தின் முதிய தொண்டர்களில் ஒருவரான டாக்டர் நர்.கனகரத்தினம் சைவசித்தாந்த பண்டிதர் "சைவபூசணம்" என எமது குருநாதரால் அழைக்கப் பெற்றவரின் சைவப் பணிகளை உணர்ந்து நாம் பெருமைப் படுகின்றோம்.

எமது குருநாதனின் உடல்நலம் குன்றியிருந்த காலத்தில் அவர்களுக்கு வைத்திய உதவிகளுடன் ஆதீனப் பணிகளிலும் தொடர்பு கொண்டு உதவி புரிந்து வந்தார்கள்.

இப்பணிகள் வளர்ந்து முதிர்ந்து அன்னாரின் வயது முதிர்ந்த இக்காலத்தில் பெரும் பணியாக இருப்பதையிட்டு நாம் மிக மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆதீனப் பெரும் பணிகளில் தாம் ஓர் புராணிகராதலினால் அப்பணி நிலைக்க ஆதீனத்தால் புராணம் படித்துப் பயனுரைக்கும் ஓர் பரம்பரையை ஆக்கி வைத்தார்கள். அன்று தொட்டு இப்பணி செவ்வனே நடைபெற்றுவருவது அன்னாரின் தூய உள்ளத்தின் வலிமையெனலாம்.

எம்முடன் நெருங்கிப் பழகி வந்த டாக்டரவர்களில் தம் வாழ்க்கை நலன்கள் மற்றுமானவை எம்முடன் கலந்து உரையாடுதல் வழமை.

மாவைக் கந்தனதும் தெல்லியூர்த் துர்க்கா தேவியினதும் கடாட்ஷம் தம் சிறுபராய வழிபாட்டால் தமக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டித் தம்பிற்கால வாழ்க்கை நனி சிறந்த தென்பது போன்ற தெய்வீக உணர்வு உரையாடல்களையும் நெருக்கமாகப் பேசிக் கொள்ளுவார்கள்.

சிறுபராய தெல்லியூர் வாழ்வையும் பின்னதாகிய இக்கால வாழ்வில் யாழ்ப்பாண நல்லூர்கந்தனின் கிருபா கடாட்ஷமும் பெற்ற தமது தெய்வீக வாழ்வையும் எடுத்து மகிழ்ந்துரைப்பார்கள்.

வாழ்க்கையில் நன்மை, தீமை, சுகம், துக்கம், இன்பம், துன்பம் போன்ற துவம் துவம் பிறப்புரிமையெனவும் தம்மை யெல்லாம் கஷ்ட நஷ்டங்களிலிருந்துந் தெய்வ வழிபாடு காப்பாற்றிய உண்மைகளையும் பேசி மகிழ்வார்கள்.

இன்னோரன்ன நற்சம்பாஷணைகள் அவர்களது சுபாவம்.

இளமையில் கல்வி, இளமைச் சமயாசாரம், இளமைப்பழக்க வழக்கம், ஒழுக்கம், இளமையில் பொருளாதார சனசமூக நிலைத்தொடர்பு, சுற்றாடல் சுவாத்தியம், இளமையில் சுகாதாரச் சுகவாழ்வு முதலியவற்றைப் பரப்பும் அவசியம் என்பன இவரெடுத்துரைப்பன.

இவற்றையெல்லாம் நம் சமயம் தன்னுள் பின்னிப் பிணைத்து வைத்திருப்பதை நாம் பார்க்கின்றோம். இவ்வண்ணம் ஆதியிலிருந்து முதியோர், கல்விமான்கள் அமைத்ததும் இவற்றை இளமையில் கல்வியாக்கிப் பயின்று மனதில் பதியச் செய்வதும் நன்மைகளை உண்டு பண்ணுதற்கேயாம்.

இவற்றை நாம் பாடத்திட்டங்கள் மூலமாகவும், போதனைகள் மூலமாகவும் இளஞ் சந்ததியினருக்கு கற்றுக்கொடுத்தல் வேண்டும்.

கோயில்கள், மடாலயங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற தாபனங்களில் இக்கல்வியை ஊக்கிவித்தலும் மிக மிக அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் அவர்கள் இதற்கு முன் சில நூல்களை வெளியிட்டுவந்து இப்போது பெருநூல்களைப் பதிப்பிக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இத்தொண்டில் முதல் வெளியீடாகத் திருவாதவூரடிகள் புராணத்தைப் பதிப்பிக்கிறார்கள்.

அடுத்த வெளியீடாகத் திருவாசகத்தையும் அச்சிடுவிப்பது அவர்களின் நோக்கம்.

பழம் பெரும் நூல்கள் மறைந்து வரும் இக்காலத்தில் இப்பணி புண்ணியமானதொன்றாகும்.

தமிழுக்குஞ் சைவத்திற்குஞ் செய்யுந் தொண்டுகளில் இத்தொண்டு தலை சிறந்ததாகும்.

டாக்டர் அவர்களை சைவபிமானிகள் ஊக்கிவிக்க வேண்டும் என வேண்டுகின்றோம்.

நமது ஆசி அவர்களுக்கு என்றும், நன்றாக இப்பணிகள் மிளிர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

நல்லை ஆதீனம்
யாழ்ப்பாணம்
(முன்னைய பதிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மதிப்புரை

## ஆத்ம ஜோதி நா. முத்தையா
(ஆசிரியர் : ஈழத்துச் சித்தர்கள்)

தெல்லிப்பழை என்றதும் துர்க்கை அம்மன் தேவாலயமே முன்நிற்பதாகும். மகாஜனாக் கல்லூரியும், யூனியன் கல்லூரியும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்திருப்பதும் அடுத்தபடி நினைவுக்கு வரும். பழமை மிகுந்த காசிப்பிள்ளையார் கோயிலும் வைரவர் கோயிலும் தோதரை அம்மன் கோயிலும் ஓர் காலத்தில் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்திருந்தன.

இத்தகைய சூழலிலேதான் இளையதம்பி நாகலிங்கம் என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். அவரது அன்பு மனைவியார் பெயர் செல்லம்மா என்பது. இவர்கள் செய்த தவப்பேறாக உதித்தவர் தான் வைத்திய கலாநிதி கனகரத்தினம் என்பவர். ஆங்கில வைத்தியர் ஒருவர் சைவ சித்தாந்த நூல்களைக் கற்று சைவ சித்தாந்த பண்டித பரீட்சையில் சித்தியெய்தி புராணங்களிற்கு பயன் சொல்லுகிறார் என்றால் இன்றைய உலகில் உள்ள அதிசயங்களில் இதுவும் ஒன்றென எண்ண வேண்டி உள்ளது.

இதனை ஆழ்ந்து ஆலோசிக்கும் இடத்து இத்தகைய நற்குணம் பரம்பரையாக வந்து முகிழ்த்ததென்றே கூறவேண்டும். அரசாங்க சேவகர்களாக இருந்த வைத்திய கலாநிதிகளில் பெரும்பாலோர் பத்து ஆண்டுச் சேவையின் பின் இளைப்பாறி அதன் பின் உழைக்கும் உழைப்பே அதிகமாக இருக்கும். இது பெரும்பாலானோருடைய வாழ்க்கையில் நாம் காணும் வரலாறு. திருவாளர் கனகரத்தினம் அவர்கள் தமது வாழ்க்கையின் நோக்கத்தை உணர்ந்து தமது வாழ்க்கையைத் தெய்வீகமாக மாற்றிக் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் தமது இரு கண்களென உணர்ந்தார்கள். நாவலர் பெருமானைப் போல தானும் ஏன் தொண்டு செய்யலாகாது என்ற எண்ணம் தலையெடுக்க யோக சுவாமிகளுடைய உபதேசம் வழிகாட்டத் தமது பிற்கால வாழ்க்கையின் போக்கை முற்றாக மாற்றிக் கொண்டார்கள்.

வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் சகசம். பிறப்பு இறப்பு என்பன முக்காலும் உண்மை. பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு. இந்த உண்மையை நன்கு உணர்ந்தவராதலின் தமது பிறப்பை புனிதப்படுத்திக்கொள்ளும் நோக்குடனே இத்தர்ம கைங்கரியங்களில் ஈடுபட்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது 30.10.1912ம் ஆண்டில் பிறந்த கனகரத்தினம் அவர்கள் இன்று 76வது பூர்த்தியை எட்டிக் கொண்டிருக்கிறார். இலை மறை காய் போல் கற்றவர்கள் வாழ்ந்த காலம் அது. இவர்கள் குடும்பத்தில் பலர் கற்றோர் வரிசையில் விளங்கினர்.

உயர் சைவ வேளாண் குலத்திற் பிறந்த இவர் குலப் பண்பாட்டுக்கேற்ப இளமையிலே இருவரும் இருவருக்கு வழிகாட்டியாய் வாழ்ந்த பெற்றோரும் கோயில் வழிபாட்டிலும் இயம நியமங்களிலும் சிறந்து விளங்கினார். இவரது இன்றைய நிலைக்கு முக்கிய காரணர் சூழலும் பெற்றாருமாவார். இவர்களது பராமரிப்பில் இன்றும் மூன்று தெய்வத்தலங்கள் பரம்பரையாகப் பரிபாலனம் பெற்று வருகின்றன.

"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்"
என்ற பழமொழி இவர்களுக்கேற்றதாக அமைந்தது.

இவரின் தந்தையார் மலை நாட்டிலுள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் உயர் உத்தியோகம் பார்த்தமையால் இவரது இளமைப் பருவம் தோட்டப்பகுதிச் சூழலிலேயே கழிந்தது. ஒருமுறை இவர் அருவி ஒன்றில் நீராடச் சென்ற போது தண்ணீரில் அள்ளுப்பட்டுச் சென்றார். இவரது குரல் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளார். ஓடிச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றினர். அன்றைய தினம் இறக்க வேண்டியவரைத் திருவருள் தான் காப்பாற்றியது. திருவருள் ஏதோ ஒரு நன்மைக்காகவே தான் காப்பாற்றியது என்பதை இன்றும் உணர்கிறார். ஆதலால் அந்த நன்றிக் கடனை மறவாமல் தெய்வப்பணியில் ஈடுபடவேண்டும் என்பதை உணர்ந்து செயல் ஆற்றினார்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் பரவலாகக் கிறிஸ்தவ சமயம் வேரூன்றி விட்டது. கிறிஸ்தவ சமயத்திற் சேர்பவர்களுக்கு சுமாரான செல்வாக்கு, கல்விவசதி, உத்தியோகவசதி என்பன கிடைத்து வந்த காலம். இதனால் இவரது தந்தை வழியினர் கிறிஸ்தவர்களாயினர். இதனால் பலர் உத்தியோகத்தரும் ஆயினர். இதனால் இவரது தந்தையாருடைய மைத்துனி ஒருவரும் கிறிஸ்தவராகி பெரும் செல்வாக்குடன் விளங்கினார். இவர் வைத்திய உயர் கல்விக்குப் பெரிதும் உதவி செய்தார். இவ்வுதவியினால் திரு.கனகரத்தினத்தின் வாழ்விலும் மதமாற்றம் என்னும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட இருந்தது. ஆனால் பூர்வ புண்ணியத்தினால் அவ்வலைக்குள் அகப்படாது தப்பிவிட்டார். அதனை இப்போது உணர்ந்து சைவத்திற்கு மேலும் மேலும் உழைக்க வேண்டும் என்ற வைராக்கியம் பிறந்துள்ளது.

தந்தையார் தேயிலைத் தோட்ட உத்தியோகத்தை உதறி எறிந்துவிட்டு ஊரில் வந்து ஊதியம் குறைந்த வேலைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. இதனால் குடும்பத்தில் முன்பு இருந்த செல்வாக்குக் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்றிருந்த தாய் மாமன்மார்களின் உதவியினால் குடும்பநிலை ஓரளவு உயர முடிந்தது. தாயாரின் குடும்ப நலத் திறமையினால் மற்றவர்களைப் போலவே கஷ்டமின்றி வாழமுடிந்தது. இல்லாள் நற்குண நற்செய்கை உடையவளாயிருந்தால் குடும்பத்தில் இல்லாதது எதுவுமே இல்லை. இதற்கு இலக்கியமாகவே இவரது தாயார் விளங்கினார்.

அக்காலத்தில் "கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில் மேய்க்க வேண்டும்" என்ற பழமொழி அமோகமாக அடிபட்டது. அதன் பிரகாரம் கனகரத்தினம் அவர்களும் ஒரு அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவராக ஆக வேண்டும் என்ற ஆர்வம் தூண்ட நன்கு கற்றுத்தேறி அரசாங்க மருத்துவராகவும் ஆனார்.

ஆனால் பொருளாசை அதிகம் அற்றவராகி பொது நலத்திலும் அதிகமாக ஈடுபட்டார். அத்தகைய எண்ணம் வலுவடைந்து இன்றைய நிலைக்கு அவரை வளர்த்து விட்டது. தானங்களுள் ஞானதானமே சிறந்தது என்ற எண்ணம் தலைப்படத் தொடங்கியது. அன்னதானம் சிறந்ததாயினும் அடுத்த நேரத்திற்கு வேறொருவர் கையைத்தான் பார்க்க வேண்டும். சொர்ணதானம் என்றாலும் பெற்றுக்கொள்பவனின் மனம் திருப்தி அடைவதில்லை. ஆனால் ஞானதானம் என்பது இம்மைக்கு உதவுவதோடு மறுமைக்கும் தொடர்ந்து செல்வது இதனை உணர்ந்து வைத்திய கலாநிதி அவர்கள் பின்வரும் நூல்களைப் பதிப்பித்து இலவசமாகவே வழங்கினார்கள்.

1. பன்னிரு திருமுறை வரலாற்றுச் சுருக்கம்
2. திருமூலர் சரித்திரச் சுருக்கம்
3. பிள்ளையார் உற்பத்தி (கந்த புராண கயமுகன் உற்பத்திப் படலத்தில் பத்துப்பாக்களும் விளக்கமும்)
4. சிவயோக சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்
5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரச் சுருக்கம்
6. சைவசித்தாந்தப் பக்திப் பாடல்கள்

யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்த புராணமும் திருவாசகமும் கலந்த ஒன்றென உணர்ந்த வைத்திய கலாநிதி அவர்கள் எல்லோரும் மணிவாசகருடைய உண்மைச் சரித்திரத்தை அறிதல் மூலம் திருவாசகத்தையும் உணரமுடியும் என்ற கருத்தை உடையவர்களாய் திருவாதவூர்ப் புராணத்தை தத்துவச் சுருக்கத்தோடு வெளியிடுகின்றமை தமிழ் மக்களுக்குப் பேருதவியாகும். இத்தகைய ஞானதானப் படைப்புக்கள் மேலும் மேலும் திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு இறைவன் எல்லா நலன்களையும் அருள வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

(1989ல் பதிக்கப்பெற்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மன்னார் முன்னை நாள் மேலதிக அரசாங்க அதிபரும்,
தகவல் ஒலிபரப்பு அமைச்சின் முன்னாள் உதவிச் செயலாளரும்,
இலங்கை நிர்வாக சேவையாளரும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் முன்னாள் இணைப் பொருளாளரும் ஆகிய
மு. ஆறுமுகம் அவர்கள் வழங்கிய

# இரங்கலுரை

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ் வுலகு" என்றதற்கமைய வைத்திய கலாநிதி நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள் காலனின் பாசத்தில் கட்டுண்டு 06.02.99 அன்று அமரராகி விட்டார். வைத்திய கலாநிதி அவர்கள் தன்பெருமை தானறியாத் தன்மையர். அவர் வைத்திய கலாநிதிப் பட்டத்துடன் விளையாட்டுத்துறை, சங்கீதம், சைவசித்தாந்தத்துறையிலும் கை தேர்ந்தவர். தன் ஊக்கத்தினால் சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தது மாத்திரமன்றி தற்பொழுது நலிந்து போகும் புராணபடனத்திலும் ஆர்வம் காட்டியவர். அன்னாரின் ஊனுடல் 10.02.99 அன்று அக்கினியுடன் சங்கமித்தாலும் அவரின் புகழுடல் இவ்வுலகில் என்றுமே புகழ் பூத்துக் காய்த்துப் பழமாகி,

இக்காயம் நீங்கி இனியொரு
காயத்திற் புக்குப் பிறவாமல்
போம் வழி நாடினார்.

ஆயிரம் பிறைகண்டவராகிய, அமரர் கனகரத்தினம் அவனே தானென்று இன்பக்கடலில் இளைப்பாறிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பினிற் கூர்மை
ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர் பெற்றுருச் செய்த
அவ்வுரு அப்பினிற் கூடிய
தொன்றாகுமாறு போற் செப்பினிற்
சீவன் சிவத்துள் அடங்குமே

எப்பவோ முடிந்த காரியம் எனினும் பந்தம் பாசமுள்ள அன்னாரின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இன்னும் அவரின் சுற்றத்தவர்கள் அமரர் அமைதியாகத் திருவடி நீழலில் உறங்கி விட்டார் என்று சாந்தியடைவார்களாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

அமைதி, அன்பு, பண்பு, அறிவுடமை, சிந்தனை நிரம்பிய உள்ளம். இளமை பொருந்திய டாக்ரர். நா. கனகரத்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் மிகுந்த பற்று உடையவர். [பலருக்கும் ஏற்றமுறையில் புராணங்களுக்கு நல்லை ஆதினத்தில் பல ஆண்டுகளாக பயன் கூறி தனது நீண்ட பிற்காலத்தை கழித்தார்]

இவர் தனது வைத்திய சேவையில் காட்டிய திறமைகளும், தன்னலமற்ற சேவை மனப்பாங்குகளும் மற்றும் அர்ப்பணிப்புகளுமே இவரை உயரச் செய்தன. வைத்தியச் சேவையில் மட்டுமல்ல சமூக சேவையிலும் தனது சொந்த வாழ்க்கையிலும் இவர் உயர்ந்தவர் எனப் பேசப்படுவதற்கு இவையே காரணங்களாக அமைந்தன.

இவர் தன் அயராத உழைப்பினால் தான் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் அவையில் முன் நிற்க வைத்துள்ளார்.

'தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய வாழ்ந்து அவர்களை உயர்வு பெறச் செய்து அவர்களின் உயர்வைக் கண்டு களித்து மகிழ்ந்தார்.

'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்' என்பதற்கமைய அவர் பிள்ளைகள் சமூகத்திற்குரியவர்களாக வளர்ந்துள்ளார்கள். தம் நன்றியுணர்வை மேலும் மலர்த்தி அவரது சிறகுக்குள் வாழும் ஒழுக்கமுள்ள குழந்தைகளாகவே இன்றும் உள்ளனர். இதுவே அவர் பெற்ற பேறுகளில் பெரும் பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் வைத்தியரிடம் காணப்படவேண்டிய தருமம், நீதி, நேர்மை, அன்பு, அர்ப்பணிப்பு, பொறுமை, தேசபக்தி, தெய்வபக்தி, ஆதியாம் குணங்கள் ஒருங்கே இவரிடம் காணப்பட்டது. இவரது பாராபட்சமற்ற செயற்பாடும் உறுதியான நேர்மைமிக்க பேச்சும் விரிந்த மனப்பாங்கும் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன. வள்ளுவர் கண்ட அன்புடைமை, அருளுடைமை, பண்புடைமை எல்லாவற்றிற்கும் இலக்கணமாய்த் திகழ்ந்தார். தமர், பிறர், பெரியோர், சிறியோர், கற்றார், கல்லாதார் என்ற வேற்றுமைகளைப் பாராது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மா மனிதரானார். இவர் ஆயிரம் பிறைகண்ட பெருவாழ்வு பெற்றவர். இவரது ஆன்மா தில்லை நடராஜனின் திருவடியில் பேரானந்தப் பெருவாழ்வு பெறத் தியானிப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சித்தவைத்திய கலாநிதி
வே. குகமூர்த்தி

"கந்தையாவளவு"
259 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
21.02.99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டுசீர் சிறப்பு

மனிதர் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் இயற்கையாக இறைவனால் நடாத்தப்படுகின்றது. பிறந்தவர்களுள் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதர்களால் போற்றப்பட்டுப் புகழோடு வாழ்பவர்கள் சிலர். இப்படியான சில மனிதருள் முன்னணியில் வைத்து எண்ணக்கூடிய தன்மையை அடைந்தவர்தான் வைத்திய கலாநிதி நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள். அவர்கள் வைத்திய கலாநிதியாக இருந்து இளைப்பாறிய பின் சைவப்புலவர், பாலபண்டிதர் பரீட்சைகளில் சித்தியெய்தி,

பின்னர் கந்தபுராணத்திற்குப் பயன் சொல்வதில் மிகவும் நிபுணராகிச் சமயத் தொண்டு செய்தார்.

இதற்கு முன்பு வைத்திய சேவையில் இருக்கும் பொழுது Tennis Player ஆக இருந்து யாழ்ப்பாணத்தில் Champion பட்டமும் பெற்றார்.

அவர் தவத்திரு சிவயோக சுவாமிகளின் சிறந்த பக்தராக இருந்தபடியால் தான் கட்டிய வீட்டுக்கு 'யோகமனை' எனப் பெயர் சூட்டினார்.

இன்னும் கச்சியப்பசிவாச்சாரியார் குருபூசை, சமயகுரவர் நால்வர் குருபூசை இவற்றை நடாத்தினார்.

பின்வரும் நூல்களைப் பதிப்பித்து இலவசமாகவே வழங்கினார்.

1. பன்னிரு திருமுறை வரலாற்றுச் சுருக்கம்.
2. திருமூலர் சரிதச் சுருக்கம்
3. பிள்ளையார் உற்பத்தி
   (கந்தபுராண கயமுகன் உற்பத்திப் படலத்தில் பத்துப் பாக்களும் விளக்கமும்)
4. சிவயோக சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்
5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரச் சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சைவசித்தாந்த பக்திப்பாடல்கள்

திருவாதவூரடிகள் புராணத்தைப் பதிப்பித்து சைவ உலகிற்கு பெருந்தொண்டாற்றினார்.

நான் "சிவஞானபோதம்" "கைவல்ய நவநீதம்", "உள்ளது நாற்பது" என்னும் நூல்களை அவரிடம் இருந்தே கற்றுக் கொண்டேன்.

அவரின் ஜீவாத்துமா பரம் பொருளின் பாதார விந்தங்களைச் சார்ந்து சாந்தி நிலையெய்த வேண்டுமென உளமாரப் பிரார்த்திப்போமாக.

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

- திருக்குறள்

"மரணத்தை மனிதன் மறக்கலாம்
மரணம் மனிதனை மறப்பதில்லை"

20 (46)

- சி. திருநாவுக்கரசு

அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுத்த பழம்

நன்றாக முற்றிப் பழுத்த பழம் விழுவது இயற்கை. இதை இவ்வுலகில் யாராலும் தடுக்க முடியாது. எனினும் சிலரை ஊழிக்காலம் முழுவதும் மறக்க இயலாது.

அவ்வழியில் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டு கந்தர்மடத்தில் வாழ்ந்து வந்தவருமான அரும்பெரும் சைவத்தொண்டராகிய டாக்டர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்களை என்றும் மறக்க இயலாது.

குறிப்பாக சைவசமயத்தவர்களிற்கு, புராணப்பாடல்களில் உள்ள பொருள் நன்கு இலகுவான முறையில் விளங்க பயனுரைப்பதன் மூலம் புராணப்பாடல்களைக் கேட்போர்க்கு பெரும் தொண்டாற்றி வந்துள்ளார்கள். இதன் மூலம் மேலும் பலருக்கு ஆர்வத்தை உண்டாக்கி இருக்கிறார்கள்.

பெற்றதாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரைமேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்தவத்தவர் உள்ளிருந்து ஓம்பும்
நமச்சிவாயத்தை நான் மறவேன்.

இப்பாடலிற்கு அமைய எம்முடன் பழகும் பொழுது, ஓம் நமச்சிவாய என தொடர்ந்து கூறித் தியானித்தால் சிவாயநம என தானாகவே சொல்ல வரும் என எமக்கு கூறுவார்கள்.

ஆங்கில வைத்தியராக இருந்த இவர் சைவசித்தாந்த நூல்களைக் கற்று சைவசித்தாந்த பண்டிதப் பரீட்சையில் சித்தியெய்தி புராணங்களிற்குப் பயன் சொல்லி வந்துள்ளமை மூலம் பிறந்த வாழ்வை பயனுள்ள புனித வாழ்க்கையாக கழித்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எழுபத்தேழாவது வயதில், திவ்வியதரமான புராணங்களில் ஒன்றாகிய திருவாதவூர் அடிகள் புரணாத்தை சைவ மக்கள் எல்லோரும் பயன்பெறும் பொருட்டு புத்தகமாக 1989இல் முதற்பதிப்பாக பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

குறிப்பாக மார்கழித்திங்களில் வரும் திருவெம்பாவை திருநாட்களில் இப்புத்தகத்தைப் பாவித்து சைவமக்கள் பயன்பெறுகிறார்கள்.

இவரது இறுதிக்காலத்தில், இவரைச் சென்று பார்ப்பது எமது வழமை. திருவாதவூரடிகள் புராண ஓதல் நடைபெறும் காலமாகிய கடந்த மார்கழியில் (ஜனவரி 1999இல்) இவரை இறுதியாகச் சந்தித்த பொழுது, இன்று என்ன பகுதியில் என்ன பாடல் விட்டனீங்கள் எனக்கேட்டு அப்பாடலைப் படிக்கக் கூறினார். நாம் அப்பாடலைப் படித்ததும் அவர் மிக எளிய நடையில் பயன் கூறினார். அவரிற்கு சில வருடங்களாக புராணபாடல்களில் தொடர்பில்லாமல் இருந்தும்கூட அவரால் சிறப்பாக பயன் கூறப்பட்டமை அவரது ஞானத்தை எம்மால் வியக்கக்கூடியதாக இருந்தது.

தானங்களுள் சிறந்தது ஞானதானமாகும். ஆனால் அன்னதானம் சிறந்ததாயினும் அடுத்த சாப்பாட்டிற்கு வேறொருவர் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டும். ஆனால் ஞானதானம் இப்பிறப்பிற்கு உதவுவதோடு மறுமைக்கும் தொடர்ந்து செல்வதாகும்.

கடவுள் நாட்டங் கொள்ளுபவர்
அரிதினும் அரிது என்பதுதான்
உலகத்தவர்களைப்பற்றிய உண்மை
போகம் என்னம் கசப்பு வாய்ந்த காயை
உலகத்தவர் அருந்துகின்றனர்
யோகம் என்னும் இனிய கனியை அவர்கள்
நாடுவாரில்லை.

\- ஸ்ரீராமகிருஸ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் நாட்டங் கொண்ட உலகத்தவருள் ஆங்கில வைத்தியர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்களைக் குறிப்பிடல் தகும்.

சாந்த குணமும், தெய்வபக்தியும், விடாமுயற்சியும், ஏனையோரிற்கு உதவும் நற்குணமும் இயல்பாகவே உடைய பண்பினர்.

சிறிது காலம் மக்களுடன் வெளிநாடுகளில் தங்கி இருந்த அன்னார் தன்னுடைய இறுதிக் காலத்தை இறைதொண்டு செய்ய பயன்படுத்த வேண்டுமென தாயகம் திரும்பினார். தோளில் ஒரு பையுடன் இங்கு மிக எளிமையாக நடமாடினார்.

தந்தையாரை அவரது அரும்புதல்வன் (திரு. சுரேந்திரன் - யாழ் மாநகரசபை) கண்ணை இமைகாப்பது போன்று இறுதிவரை பராமரித்தார். இதற்கு அவரது துணைவியாரும் (திருமதி சுரேந்திரன் - ஆசிரியை யாழ். இந்துக்கல்லூரி) பக்கபலமாக இருந்து சிறிதேனும் முகம் கோணாது பணிவிடைகள் செய்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது.

நல்லூர்க் கந்தன் கருணையை கணமும் மறவாதிருந்து, சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டுபரிதலை தமது சேவையெனக் கருதியமையே அனேக மக்களை இவர்பால் ஈர்க்கச் செய்தது.

இப்பெரியாரின் நினைவுமலரில் எமது கருத்துக்களையும் வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும்.

அ.ச.நா. இராசையா
விவசாயப் போதனாசிரியர் நல்லூர்

48/7, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
10.02.1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல வண்ணம் வாழ்ந்த பெரியார்

"எப்பொழுதோ முடிந்த காரியம்". இது யோகர் சுவாமிகளின் வாக்கியம்.

மனித வாழ்வின் தோற்றம், மறைவு - இன்பம், துன்பம் அனைத்தும் எமக்கு அப்பாற்பட்டன.

ஆயினும் பெறுதற்கரிய வாழ்க்கைக் காலத்தை நல்ல முறையில் அமைத்துக் கொள்வது எம்பாற்பட்டது.

அந்த வகையில் அமரர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து மடிந்து விட்டார்.

அண்மித்த காலத்தில் பிறந்த மண்ணுக்கு குடும்பத்துடன் வந்து சில காலம் தங்கிச் செல்லலாம் என்ற விருப்பம் அத்தனை விரைவில் சித்திக்கும் என்று நாம் எதிர்பார்க்க வில்லை. அப்பேறு கடந்த ஆண்டு சித்தித்தது.

அப்பொழுது தன் தந்தையார் அமரர் கனகரத்தினம் அவர்களுக்கு சிறிது காலமெனினும் தன் கடமைகளை ஆற்றிய திருப்தி என் மனைவிக்கும் உண்டு. அப்பேறு மருகர் என்ற வகையில் எனக்கு கிட்டியது, மகிழ்ச்சியே.

அமரர் அவர்கள் தொழிலால் மருத்துவர், மேலைத்தேயக் கல்வி முறையும் அக்கல்வியால் கிட்டிய மேலைத்தேயப் பழக்க வழக்கங்களும் வாழ்க்கையின் நடுப் பராயம் வரை அவரை நன்கு ஆட்கொண்டன.

துடுப்பாட்ட விளையாட்டிலும் டெனிஸ் விளையாட்டிலும் அவர் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

வாழ்வின் நடுப்பராயத்தின் பின் ஆங்கில மருத்துவர் ஆன்மீகவாதியாகத் தன்னை மாற்றிக் கொண்டார். சைவ சித்தாந்தத்தில் நுண்மான் நுழைபுலம் மிக்கவரானார். நடை, உடை, பாவனைகளிலும் மாற்றங்கள் புலப்பட்டன.

ஆங்கிலக் கல்வியெனினும் ஆழக்கல்வியின் வெளிப்பாடாகவே இதனை உணரமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரருக்கு முழுமைமிக்க நிறை வாழ்வு கிட்டியது என்று கூறுவது மிகைப்பட்ட கூற்றல்ல.


அவரின் இறுதிக் காலத்தில் அவரின் மருமகள் திருமதி சத்தியரூபி சுரேந்திரன் மகளாகவே நின்று உதவினார். திருமதி சத்தியரூபி சுரேந்திரன் எம் அனைவரினதும் நன்றிக்குரியவர்.

அமரர் அவர்களின் ஆன்மா சாந்தி பெற நாம் இறைஞ்சுவோம்.

டாக்டர். ச. ஜோதிலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்மீகத் தேடலில் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லவர் ஒருவர் பற்றி

அமரர் டாக்டர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்கள் என்னுடைய நெருங்கிய நீண்ட கால நண்பன். பெருமையான வாழ்வு வாழ்ந்து நிறைவுற்றார்.

அவரும் நானும் ஒரே இடத்தில் பல வருடங்கள் வைத்திய சேவை செய்தோம்.

அவர் யாழ். மக்களுக்கு அளப்பரிய வைத்திய சேவை செய்துள்ளார்.

நோயாளிகள் அவரிடம் சிகிச்சை பெறுவதற்காக விரும்பி வருவார்கள்.

கண்ணியமும் கௌரவமும் அடக்கமான கடமை உணர்வும் விளம்பரம் வேண்டாத வாழ்வு முறையும் அமரர் டாக்டர் கனகரத்தினத்தின் தனிப் பெரும் பேறுகள்.

இதற்கு அவருடைய ஆத்மீக வழிபாடும் கோயில் ஈடுபாடும் துணை நின்றன.

நல்லாரைக் காண்பதும் அவர் சொல் கேட்பதும் மட்டுமல்ல அவர் குணங்களை உரைப்பதும் நன்று தானே.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்

டாக்டர். சோ. சண்முகலிங்கம்.

Boston, U.S.A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிலைத்தவை

உலக வாழ்வு நிலையற்றது "வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்", பரித்த சுற்றமும் மற்றவன் துணையும் பலரும் கண்டு அழுதெழ உயிர் உடலைப் பிரிந்துபோம் இது நிச்சயம்" என்பன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கில் வந்தவை.

இறப்பு நிச்சயமானது என்பது யாரும் ஏற்றுக் கொண்டது. ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப் "பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு" சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு" "நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே" என்ற திருமந்திரப் படி இறந்தவரை மறந்து விடுதலும் உலக இயற்கை.

டாக்டர். நா.கனகரத்தினம் அவர்களை அங்ஙனம் மறக்க முடியவில்லை. அவர் செய்த பணிகள் அவரை நினைக்க வைக்கின்றன.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஆரம்பகால அங்கத்தவராகித் தளர் நடைப்பருவத்தில், தாங்கி நடை பயிற்றிய பெருமைக்குரியவர். அகில இலங்கை திருமுறை மன்றத்தால் நடாத்தப்பட்ட சைவ சமயபாட வகுப்பு ஆசிரியராக டாக்டர் நா.கனகரத்தினம் அவர்கள் ஆற்றிய பணியை மன்றம் என்றும் மறக்க முடியாது.

டாக்டர் நா.கனகரத்தினம் அவர்களின் ஆர்வம் அளப்பரியது. புராணப்படிப்பு, இசை, எழுத்து முதலிய பல துறைகளிலும் ஆற்றல் பெற அவர் ஆர்வம் கொண்டிருந்தார்.

நல்லை ஆதீன புராண சபை, கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் மன்றம், சைவபரிபாலன சபை என்பன அவரின் ஆர்வத்திற்கு இடம் கொடுத்தன.

நல்லை ஆதீன குருமணியின் ஆசியும் திரு.கா.மதியாபரணம் ஜே.பி அவர்களின் ஆதரவும் டாக்டர் நா.கனகரத்தினம் அவர்களின் திருத்தொண்டுகளுக்கு வளமூட்டின.

திருவாதவூரடிகள் புராணம் பதிப்பு அவரது செயற்பாடுகளின் மகுடமாக என்றென்றும் அவரை நினைவூட்டும்.

பண்டிதர் வ. பேரின்பநாயகம்
தலைவர் அகில இலங்கைத் திருமுறைமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா!

கணபதிக்கு மலர் சாத்தி துதி பாடி
"யோகர் மனை" யில் வாழ்ந்து
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
எல்லோர்க்கும் இனியவராய்
சுய நலம் கருதாத தேச பக்தனாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
நல்லூரான் அடிபற்றி தெய்வமாகி விட்ட
எனது தாத்தாவிற்கு சில வாசகங்கள்.

முந்தைய பிறப்பில் செய்த
முழுத்தவம் பலித்ததாலோ
இந்த நற்பிறப்பில் - உங்களைத்
தாத்தா வாகக் கண்டேன்

இன்ப நற்செல்வ மெல்லாம் எழிற்கலை
பஞ்ச புராணம் கந்த புராணம் பயில வைத்து

பக்தி வழி காட்டினீர்கள் - தாத்தா
சிறு பிள்ளையிலே இசைஞானம் வளர
வழி காட்டினீர்களே - எந் நன்றி
உங்களுக்குச் சொல்வேன்.

"எப்பவோ முடிந்த காரியம்" என்ற யோகர் சுவாமிகளின் கூற்றுக்கு இணங்க இம் மண்ணை விட்டு எங்கு சென்றீர்கள்! தாத்தாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பேரப்பிள்ளை

கஜானி – ஞானச்சந்திரன்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## சைவசித்தாந்த கலாநிதி
## வித்துவான் க. கணபதிப்பிள்ளை
## அவர்கள்

டாக்டர் நா. கனகரத்தினம் அவர்கள் சித்தாந்த பண்டிதர், சிறந்த இறைபக்தி, குருபக்தி, அடியார் பக்தி மூன்றும் உடையவர்கள்.

காலத்துக்குக் காலம் தாம்பெற்ற இறையுணர்வைப் பக்தியுடன் பாடல்களாகப் பாடுகின்றவர்கள்.

அவர்கள் பாடல்களில் திருமூலரின், திருமந்திரம், சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனைச்சாயல் இருப்பதனைக் கண்டு பேருவகை கொண்டவர்களுள் யானும் ஒருவன்.

இந்நூல் அளவாற்சிறியது, பொருளாற் பெரியது. தாம் பெற்ற பேரின்ப அனுபவத்தை நாமும் பெற்று மகிழ்ந்திட வைத்துள்ளார்கள்.

டாக்டர் அவர்கள் யான் எனது என்னும் செருக்கற்ற நிலையினராக நம்மிடையே வாழ்கின்றவர்கள்.

வாழ்க அவர்கள் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN APPRECIATION

The passing away of Dr. Nagalingam Kanagaratnam removes from our midst a highly cultured and dignified personality.

Dr. Kanagaratnam hailed from Tellippalai. Having passed the Apothecary's examination from the then Medical College at Colombo, he served in many parts of the Island as a Government Medical Practitioner.

On retirement from Government service he preferred to devote himself more to the study of religion and religious philosophy than to continue in active medical practice. Though he did undertake some medical practice more as a service than as a profession.

The late Doctor's personality can be well assessed by his achievements after his retirement.

He studied Saiva Sidhantha philosophy and qualified himself in the field after his retirement. He studied instrumental music to qualify himself to join the chorus singers at temples – especially at Nallur Kanthasamy Temple. He could be seen at many a temple at various times actively engaged in **PURANA PADDIPPU** which required extensive reading and an exposition to the audience of the contents of Saiva works like Periya Puranam,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thiruvilayadat puranam etc. One of the greatest qualities that illumined the man was his humility. In spite of his age, achievements and intellect he was willing to learn from others in a humble way and this quality in him added to his lustre.

Dr. Kanagaratnam did not confine himself merely to the study of religious philosophy and teaching at temples. He utilized his medical knowledge for free treatment of a few who deserved such care. I am aware that Dr. Kanagaratnam used to visit the Nallai Thirugnanasambanthar Aatheenam for some time regularly to treat the late first Head of the Aatheenam – the immediate predecessor in title of the present Incumbent- when be was not in good health. Dr. Kanagaratnam felt that a religious dignitary deserved service at his door and volunteered to undertake such service.

Dr. Kanagaratnam was so much immersed and understood the tenets of Saiva Sadhantham that at his own expense he had a number of bookleth published for distribution amongst the public giving in nutshell the great thoughts of Saiva Sages of Yore. The Preface to another booklet published by him earlier. -"Tennis for Beginners"- brings out his mind and thinking in publishing booklets.

Dr. Kanagaratnam had apparently lived a disciplined life throughout which explains his active health even in later



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

years. He died when he was 85. For sometime before his death he was confined to his bed and I used to visit him once in a way. Perhaps I saw him even about a month before his death. There was not a single day when he complained of any illness. He would merely say that he was feeling physically weak and that he was not bothered by any other ailment. His physical and mental activity after retirement from medical practice perhaps explains his steady health until his last.

One cannot help admiring the sterling qualities of Dr. Kanagaratnam. He was very simple and humble and always duty-conscious. He had fully discharged his duties by all the members of his family and I have no doubt that all his children, would gratefully remember the stations in life provided for them by him. The acquisition of Saiva Sidhantha knowledge and his appreciation thereof made him stand like a rock unmoved by the vagaries of life until be breathed his last.

May his soul attain Godliness.

BROWN ROAD,
2nd LANE,
JAFFNA.

**S.KODESWARAN B.A**
**ADVOCATE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tennis Instructions Specially Designed for beginners

## written by late Dr. N. Kanagaratnam

## Preface.

Even since my contact with tennis in this country (Ceylon), I have witnessed with pity the majority of players playing unorthodox tennis specially in the suburbs of the capital and in the outstations.

Secondly, I have noticed that most books on this game give instructions for mature players only but are of little help to beginners.

Another factor that prompted the publication is the fact that there are very few coaches in this country and they too are not available in the outstations.

I hope this book will serve the desired purpose and be of good service and guide to those concerned.

I regret the inability to give adequate demonstrations in pictures. The reason is obvious. The western writers have the unique opportunity to get pictures of first class players.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This inadequary can be covered up by reference to the many books available on advanced tennis. They carry copious of photos of emenient players in action.

The few illustrations have been designed with great difficulty. But they serve the purpose and are the most essentials.

I take the opportunity to show my gratitude to the under mentioned who have helped in the different fields in the evolution of this book.

Mr S. Srinivasan, M. A. and class I, A. A. A official and once International Soccer Referee class I who has gone through the whole manuscript and helped in making necessary amendments and to the photographers Colombo studio, Jaffna and to the printers Sri. Sanmuganantha Press, Jaffna who were of great help in the publication.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குல தெய்வம்

குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
குஞ்சரியை மணம் புரிந்த எங்க்ள் குலதெய்வம்
சரவணையில் வந்துதித்த எங்கள் குலதெய்வம் சிவ
சண்முகமாய் வந்துதித்த எங்கள் குலதெய்வம்
பழநிமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் சிவ
பக்தர்களைக் காத்தருளும் எங்கள் குலதெய்வம்
பண்டாரம்போலிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
பச்சைமயில் ஏறிவரும் எங்கள் குலதெய்வம்
ஆண்டிவேடம் பூண்டிருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
அண்டினோரை ஆதரிக்கும் எங்கள் குலதெய்வம்
வேலாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் வடி
வேல் முருக நாமம்படைத்த எங்கள் குலதெய்வம்
தெண்டாயுதம் தரித்த எங்கள் குலதெய்வம் பால
தெண்டபாணி பேருடைய எங்கள் குலதெய்வம்
விபூதி தரித்திருக்கும் எங்கள் குலதெய்வம் அவர்
வீறுமயில் ஏறிவரும் எங்கள் குலதெய்வம்
ஆறுமுகமான பொருள் எங்கள் குலதெய்வம் அவர்
ஆறுபடை வீடுடைய எங்கள் குலதெய்வம்
சிவனாருக் குபதேசித்த எங்கள் குலதெய்வம் சிவ
சுப்ரமண்ய பேருடைய எங்கள் குலதெய்வம் பால
சுப்ரமண்ய பேருடைய எங்கள் குலதெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத்தில் நீர் வாழ்வீர்!

'வரதா! வரதா' வென
வாய் நிறைய விளிப்பீரே!
பிரியமுள்ள பிதாவே!
அரியவும் அன்பினையே
நினைத்தாலே
இனித்திடுமே.
எங்கு சென்றபோதும்
உங்களுடனன்றோ
உடலழைத்துச் செல்வீர்.
ஆலயம் சென்றபோதும்
அருகிலுள்ள நூலகம் சென்றபோதும்
டெனிஸ்
ஆடுவதற்குச் சென்ற போதும்
கூடவே கூட்டிச் செல்வீர். நெஞ்சக் .........
கூட்டினுள்ளோ நினைவுப் பறவை ..........
சிறகடித்தே பறந்திடுதே.
ஆண்டவனை அனுதினமும்
ஆராதிப்பதன்றோ உம் தொண்டு
ஈன்ற உம் மக்களிற்கும்
இதனைத் தானே பழக்கி வைத்தீர்.
காலையும் மாலையும் பிள்ளைகள்
கற்பதை உறுதி செய்தீர்.
ஆங்கிலம் மற்றும் அனைத்துமே
அறிந்திட வழிவகுத்தீர்.
அப்பா! அனைத்துமேயெம்
அகத்தினுள்ளே விரிந்திடுதே
மக்கள் மனம்போல் மணம் பெற
மனதார வாழ்த்தி நின்றீர்.
மறக்கத்தான் முடியுமோ தந்தையே!
உறவிற்காக உயிர் கொடுக்கத் தயங்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமரே! உம் மக்களாய்
பிறப்பதற்கு நாமன்றோ
புண்ணியம் செய்தோம்.
விசா மூன்று நாளில் பெற்று
விமானத்தில் கனடா வந்தீர்.
வந்தபோதும், பிள்ளைகள்
வாசலே கதியாய்க் கிடந்தீர்.
'வாருங்கள் நயாகாரா போய்
வருவோமென' அழைத்த போது
வந்தது பிள்ளைகளைப் பார்ப்பதற்கோ? இல்லை
வீணாக அலைவதற்கோ?.
என்றீரே! எந்தையே! உம் அன்பினை
எண்ணியே பார்கின்றோம்.
என்றுனைப் பார்ப்போமோ?
என்றுனைப் பார்பாபோமோ?
அய்யா!
மண்ணுலகைத் தான் பிரிந்தீர் - எம்
மனவுலகத்தைப் பிரியவில்லை. இம்
மண்ணில் நாம் வாழும்வரை - எம்
எண்ணத்தில் நீர் வாழ்வீர். - ஆம்
எண்ணத்தில் நீர் வாழ்வீர்.

கடைக்குட்டி

- *கனகவரதா* -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவ சித்தாந்த பக்திப் பாடல்களில் அமரரின் முன்னுரை

சைவசமயமே ஆதியாகியதும் மெய்ச்சமயமானதும் ஒன்று. கடவுள் எல்லாவற்றையுங் கடந்தவர். முப்பொருளாகிய பதி, பசு, பாசத்தை விளக்கும் சுத்தசைவ சித்தாந்தம் எல்லாங்கடந்த கடவுளே அட்டகுண மூல மூர்த்தியென விளங்கும்.

பதி, பசு, பாசம் - அதாவது கடவுள், உயிர், பிரபஞ்சம் மூன்று; இவை உள்ள பொருட்கள். இவ்வுண்மையைச் சில தற்காலச் சமயங்கள் மறுத்தாலும் இஃது உண்மையின் மேல் உண்மை என்பதை அவற்றைக் கற்றுணர்ந்த எச்சமயிகளும் மறுப்பதில்லை.

இவ்வுண்மைகளை எமது கல்வியின் மூலமாகவும் வாழ்வின் சிவபக்தியாலும் புண்ணியவசத்தாலும் அனுபவவாயிலாகவும் உணர்ந்த அடியேன் பரமபதியின் அருட் கருணையால் சமயம் சம்பந்தமான கட்டுரைகளை எழுதவும் செய்யுள்களைப் பாடவும் பேறுபெற்றேன்.

இந்நிலையில் வரப்பெற்றவற்றில் பொருந்தியதே இப்படைப்பின் கருவூலம்.

எமது மத்தியில் ஒரு நூற்றாண்டுக்குக் கிட்டத்தட்ட இப்புண்ணிய பூமியாகிய யாழ்ப்பாணத்தில் பிறந்து, அரை நூற்றாண்டிற்கு மேலாக நடமாடுந் தெய்வமாக விருந்த சிவயோக சுவாமிகளின் நினைவும் அருளும்பெற்று இவை எழுதப்பட்டவை.

ஆகையால் சுவாமியவர்களின் அருளும் எமது நினைவும் பொருந்த வகுக்கப்பட்டு நாமரூபமும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியவர்களின் சரிதம், அற்புதங்கள், படைப்புக்கள் பலவாக எழுதப்பெற்றுள்ளன.

இங்கு உள்ளவற்றைப் படிக்கவும் பாராயணஞ் செய்யவும் பலவிதமான போகபோக்கியங்களுடன் போதமும் பெற்று உய்வார்கள் என்பதற்கு ஐயமில்லை.

இவ்வெளியீட்டிற்கு உதவிய பலருக்கும் எமது நன்றி. அவர்களுள் முக்கியமானவர்கள் நல்லைத் திருஞானசம்பந்த ஆதீன சுவாமிகள், வித்துவான் க. கணபதிப்பிள்ளை ஆசிரியர்.

எல்லோரும் வாழ எம்பெருமான் அருள் உண்டு. வேண்டுவார் வேண்டுமுன் ஈவான் கண்டாய்.

**சைவசித்தாந்த பண்டிதர்**
**டாக்டர். நா. கனகரத்தினம்**

சிவயோக சுவாமிகள் ஓதித்தந்த மஹா வாக்கியங்கள்

எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்
முழுதும் உண்மை
ஒருபொல்லாப்புமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றி

எங்கள் அன்புத் தந்தையார் வைத்திய கலாநிதி நாகலிங்கம் கனகரத்தினம் 06.02.99ல் சிவபதம் அடைந்த பொழுதில் வைத்திய வசதிகளைச் செய்து உதவியவர்களுக்கும், அன்னாரது மரணச்செய்தியை அறிந்து பல்வேறு வகையில் உதவி புரிந்தவர்களுக்கும், நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம் முதலாம் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியோருக்கும், வேறுபல வழிகளில் முன்னின்று உதவிகள் புரிந்தவர்களுக்கும், அஞ்சலிச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எல்லோரினதும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

20(44)அன்னசத்திரம் ஒழுங்கை,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org